24.2.2015

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### விவசாயிகளின் நலன்கள் பாதுகாக்கப்படும்: நாடாளுமன்ற கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் உறுதி



நிலம் கையகப்படுத்துதல் நடைமுறைகளால் பாதிப்புக்குள்ளாகும் விவசாயிகளைப் பாதுகாப்பதற்கு மத்திய அரசு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது என்று குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி தெரிவித்தார். நாடாளுமன்றத்தின் பட்ஜெட் கூட்டத் தொடர் தொடங்கியது. ஆண்டின் முதல் கூட்டத் தொடர் குடியரசுத் தலைவரின் உரையுடன் தொடங்குவது மரபு. அதன்படி, திங்கள்கிழமை நாடாளு மன்ற இரு அவைகளின் கூட்டுக் கூட்டத்தில், குடியரசுத் தலைவர் பிரணாப் முகர்ஜி திங்கள்கிழமை பேசியதாவது: ஜனநாயகம் குடியிருக்கும் புனிதமான இடமாகவும், மக்களின் எதிர்பார்ப்பு, நம்பிக்கைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் செயல்படும் மையமாகவும் நாடாளுமன்றம் விளங்குகிறது. அத்தகைய நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் எத்தகைய சிக்கலுமின்றி சிறப்பாக நடத்த வேண்டும் என்பதில் அரசு உறுதியாக உள்ளது. எனவே மக்களவை, மாநிலங்களவை உறுப்பினர்கள் அனைவரும் அதற்கு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும். விவசாயிகள் நலன்: நம்முடைய உணவுத் தேவைக்கு முக்கிய அரணாக விளங்குபவர்கள் விவசாயிகள். அரசுத் திட்டங்களுக்காக தனியார் நிலங்களைக் கையகப்படுத்தும்போது, அதனால் பாதிக்கப்படும் விவசாயிகளையும், அவர்களது

குடும்பங்கப்ளையும் பாதுகாப்பதற்கு அரசு அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. அதேவேளையில், நிலம் கையகப்படுத்தலில் நிலவும் நடைமுறைச் சிக்கல்களைக் குறைக்க விவசாயிகளுக்கு சரியான இழப்பீட்டுத் தொகை, கையகப்படுத்துவதில் வெளிப்படைத்தன்மை உள்ளிட்ட அம்சங்களைக் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். மதிப்புக் கூட்டப்பட்ட விவசாயம், நவீனத் தொழில்நுட்பம், சந்தை சீர்திருத்தம், உற்பத்தி மேம்பாடு உள்ளிட்டவைதான் விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும். சந்தை விலை மாறுபாடால் ஏற்படும் பாதிப்புகளிலிருந்து விவசாயிகளையும், மக்களையும் பாதுகாக்க, நிலையான விலை நிர்ணயத்துக்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டு வருகிறது.

## விலையில்லா ஆடுகள் வழங்கல்

காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம், ஊரப்பாக்கத்தில் நடந்த நிகழ்ச்சியில் அமைச்சர் டி.கே.எம். சின்னையா 267 பயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகளை வழங்கினார். ஊரப் பாக்கம் ஊராட்சியில் கால்நடைப் பராமரிப்புத் துறை சார்பில், அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் வி.கே. சண்முகம் தலைமை வகித்தார். அமைச்சர் டி.கே.எம். சின்னையா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு 267 பயனாளிகளுக்கு ரூ.33.50 லட்சம் மதிப்பிலான விலையில்லா வெள்ளாடுகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், காஞ்சிபுரம் மக்களவை உறுப்பினர் மரகதம் குமரவேல், மதுராந்தகம் சட்டப்பேரவை உறுப்பினர் கணிதா சம்பத், மாவட்ட ஊராட்சித் தலைவர் காஞ்சி பன்னீர்செல்வம், காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் சம்பத்குமார், ஒன்றியக் குழு உறுப்பினர் கலா சண்முகம், ஊராட்சி மன்றத் தலைவர் சரோஜா பெருமாள், செங்கல்பட்டு வருவாய்க் கோட்டாட்சியர் பன்னீர்செல்வம், கால்நடைப் பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் மருத்துவர்

பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். மதுராந்தகத்தில்... மதுராந்தகம், பிப். 23: மதுராந்தகத்தை அடுத்த செய்யூர் தொகுதிக்குள்பட்ட பொலம்பாக்கம் ஊராட்சியில் உள்ள 68 பயனாளிகளுக்கு, விலையில்லா ஆடுகள் வழங்கும் நிகழ்ச்சி சனிக்கிழமை மாலை பொலம்பாக்கத்தில் நடைபெற்றது. பொலம்பாக்கம் ஊராட்சி மன்றத் தலைவர் மல்லிகா தலைமை தாங்கினார். செய்யூர் தொகுதி எம்.எல்.ஏ. ராஜு, 68 பயனாளிகளுக்கு ஆடுகளையும், அதைப் பராமரிக்கத் தேவையான கொட்டகை அமைக்க, தலா ரூ. 2 ஆயிரத்துக்கான காசோலைகளையும் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில், 272 ஆடுகளுக்கு குடல்புழு நீக்கம் செய்யப்பட்டது.

## <u>நிலக்கடலை பயிரில் பண்ணைப்பள்ளி தொடக்க விழா</u>

வத்தலகுண்டு வட்டார விவசாயிகளை ஒருங்கிணைத்து சேவுகம்பட்டி அருகே செங்கட்டாம்பட்டியில் நிலக்கடலை பயிரில் பண்ணைப்பள்ளி துவக்கவிழா வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் திங்கள்கிழமை நடைபெற்றது. விவசாயி சுந்தரபாண்டி நிலக்கடலை வயலில் நடைபெற்ற விழாவில் வேளாண்மை அலுவலர் மற்றும் கோவில்பட்டி நடமாடும் மண் பரிசோதனை நிலையம் சரவணன், மண்பரிசோதனை மற்றும் நில தயாரிப்பு பற்றிய தொழில்நுட்பங்களை எடுத்து கூறினார். கேவிகே காந்திகிராமம் தொழில்நுட்ப வல்லுநர் ஷாகின்தாஜ், விதை நேர்த்தி செய்வது குறித்த முக்கியத்துவத்தை விளக்கினார். வத்தலகுண்டு வேளாண்மை உதவி இயக்குநர் அ.கோபால்ராஜ் விவசாயிகளுக்கு இயற்கை சூழல் மாசுபடாத உயிரின இடுபொருட்களை வழங்கினார். வத்தலகுண்டு ஒருங்கிணைப்பாளர் மற்றும் திட்ட அலுவலர்கள் பண்ணைப் பள்ளிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தனர். ஏராளமான விவசாயிகள் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## கூடலூர், பந்தலூர் தேயிலை விவசாயிகள் கவனத்துக்கு...

கூடலூர் மற்றும் பந்தலூர் பகுதியிலுள்ள தேயிலை விவசாயிகளுக்கு ஸ்மார்ட் கார்டு சரிபார்க்கும் பணி 23-ஆம் தேதி முதல் கூடலூரில் நடைபெறவுள்ளது. இந்திய தேயிலை வாரியம், தேயிலை விவசாயிகளுக்கு ஸ்மார்ட் கார்டுகளை வழங்கி வருகிறது. கூடலூர், பந்தலூர் பகுதியிலுள்ள விவசாயிகள் ஸ்மார்ட் கார்டுகளைப் பெற, அவர்களுடைய விவரங்கள் பிப்ரவரி 23-ஆம் தேதி முதல் 28-ஆம் தேதி வரை சரிபார்க்கப்படுகிறது. குடும்ப அட்டை, வங்கிக் கணக்கு புத்தகம், பட்டா, சிட்டா உள்ளிட்ட வருவாய்த் துறை விவரங்கள், ஜாதி சான்று, புகைப்படம் ஆகியவைகளுடன் கூடலூர் துப்புக்குட்டி பேட்டையிலுள்ள, இந்திய தேயிலை வாரியத்தின் மண்டல அலுவலகத்தில் விவசாயிகள் தங்களது விவரங்களை சரிபார்த்துக் கொள்ளலாம் என உதவி இயக்குநர் சி.கே.ரமேஷ் அறிவித்துள்ளார்

## விவசாயிகள் குறைதீர்க் கூட்டம்

நீலகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர்ப்பு நாள் கூட்டம் உதகையில் சனிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்துக்கு, ஆட்சியர் பி.சங்கர் தலைமை வகித்தார். கூட்டத்தில், தோட்டக்கலைத் துறை இணை இயக்குநர் என்.மணி தலைமையிலான அலுவலர்கள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இதில், விவசாய சங்கங்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளில் உரிய துறைகளுக்கு அனுப்பி பதில் பெறப்பட்ட 16 கோரிக்கைகள் தொடர்பான விவரங்கள் தெரிவிக்கப் பட்டது. அதைத்தொடர்ந்து, ஆவின் வளாகத்தில் கண்காணிப்பு கேமரா பொருத்துவது தொடர்பாக அங்கு நடைபெற்ற நிர்வாகக்குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதால், விரைவில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்படும். 2013-14 ஆம் ஆண்டில்

சராசரியாக 15,700 லிட்டர் பால் கொள்முதல் செய்யப்பட்டது என ஆவின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. உதகையில் ரோஜா பூங்கா வளாகத்திலுள்ள குளிர்ப்பதன கிடங்கை பழுது நீக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், பழுது நீக்கம் செய்த பிறகு ஏதாவது குழுக்கள் முன்வரும் பட்சத்தில் அதை பராமரிக்க வழங்கப்படும் எனவும் தோட்டக் கலைத் துறையின் சார்பில் தெரிவிக்கப்பட்டது. உதகை உழவர் சந்தையில் அனைத்து விதமான காய்கறிகளையும் விற்க நடவடிக்கை எடுக்கப்படும் என வேளாண் விற்பனைக் கூடத்தின் மூலமாகவும், நீலகிரி மாவட்ட விவசாயிகளுக்கு பாப்பர், லூபின் விதைகள் உதகையிலுள்ள தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தால் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. தமிழ்நாடு மின் வாரியத்தின் எல்லநள்ளி பிரிவு அலுவலகத்திற்கு உள்பட்ட ஓரநள்ளி பகிர்மானத்திலிருந்து மேல் ஒடயரட்டி பகுதி வரையிலான மின் கம்பங்களை ஆய்வு செய்து மாற்றி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மின் வாரியத்தின் சார்பிலும், மேட்டுப் பாளையத்திலுள்ள நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கத்திலுள்ள உருளைக்கிழங்கு தரம் பிரிக்கும் இயந்திரம் பழுது நீக்கி சீர் செய்யப்பட்டு உடனடியாக பயன்படுத்தப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டது.

கோத்தகிரியில் பெட்டட்டி முதல் ஆடாதொரை வரையிலான சாலைப் பணியும், மேல் ஒடயரட்டி முதல் கேத்தி பாலடா பகுதியில் பைபாஸ் சாலை அமைக்கும் பணியும், நடுவட்டம் பகுதியில் அப்பர் பிராஸ்பெக்ட், லோயர் பிராஸ்பெக்ட் பகுதியில் பாலம் கட்டவும் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படுமென வட்டார வளர்ச்சி அலுவலகத்தின் மூலமாக தெரிவிக்கப்பட்டது. விவசாயிகளின் பொதுவான கோரிக்கைகள் தொடர்பாக விவாதிக்கப்பட்ட பின்னர், கறவை மாடுகளுக்கான பால் கறக்கும் இயந்திரத்தின் செயல்பாடுகள் குறித்து ஆவின் சார்பில் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

## மார்ச் 14-இல் வேளாண் அறிவியல் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா

பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா மார்ச் 14-ஆம் தேதி நடைபெறுகிறது. இதுகுறித்து அந்தப் பல்கலைக்கழகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: பெங்களூரு வேளாண் அறிவியல் பல்கலைக்கழகத்தின் 49-ஆவது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக வளாகத்தில் மார்ச் 14-ஆம் தேதி காலை 11 மணிக்கு நடைபெறுகிறது. இந்த விழாவில் விஞ்ஞானி சி.என்.ஆர்.ராவ், சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்கிறார். கர்நாடக ஆளுநரும், பல்கலைக்கழக வேந்தருமான வஜுபாய் வாலா, விழாவுக்குத் தலைமை வகித்து மாணவர்களுக்கு பட்டம் வழங்கி கெப்ரவிக்கிறார் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தினமலர்

### இன்றைய வேளாண் செய்திகள்

### மணல் பாங்கான நிலத்தில் விளையும் தர்பூசணி

ஆர்.கே.பேட்டை: கோடையில் குளிர்ச்சி தரும் பழமான தர்பூசணி, மணல் பாங்கான நிலத்தில், குறைந்த அளவு தண்ணீரில் விளைகிறது. தர்பூசணியில், 90 சதவீதம் வரை நீர் நிரம்பி இருந்தாலும், இரும்பு சத்து உள்ளிட்ட உடலுக்கு வலிமை தரும் சத்துகள் இருந்தாலும், கோடையில் தாகம் தணிக்கவே, பெரும்பாலானோர் சாப்பிடுகின்றனர். அதிகளவு நீர் நிரம்பிய தர்பூசணி, குறைந்த அளவு தண்ணீர் பாசனத்தில் தான் சாகுபடி செய்யப்படுகிறது என, விவசாயிகள் தெரிவித்தனர். தர்பூசணி சாகுபடிக்கு, மணல் பாங்கான நிலமே சரியான தேர்வு. டிசம்பர், ஜனவரி

மாதங்களில் விதைப்பு செய்யப்பட்டு, கோடையில் அறுவடைக்கு வருகிறது. 10 நாட்களுக்கு ஒரு முறை தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. காய்க்கும் பருவத்தில் அதிகளவில் வெயில் இருந்தால், பழம் கூடுதல் இனிப்பு சுவையுடன் இருக்கும்; பனி, தர்பூசணி கொடிகளுக்கு எதிரி. ஆனால், முன்பருவ காலத்தில் கூடுதல் விலை கிடைக்கும் என்பதால், அக்டோபர் - நவம்பர் மாதங்களில், நிழல் வலை கூடாரத்தில், குழித்தட்டு முறையில் வளர்க்கப்படும் நாற்றுகளை கொண்டு நடவு செய்யப்படும் தர்பூசணி, ஜனவரி - பிப்ரவரி மாதத்திலேயே விற்பனைக்கு வந்து விடுகின்றன.

## <u>இலவச ஆடுகளுக்கு குடற்புழு நீக்க முகாம்</u>

ஈரோடு : தமிழக அரசால், ஏழை, எளிய குடும்பங்களுக்கு, இலவச ஆடுகள் வழங்கும் திட்டத்தில் ஆடுகள் வழங்கப்பட்டது. கடந்த, 2011-12ம் ஆண்டு, 3,775 பயனாளிகளுக்கு, 15,100 ஆடுகள், 2012-13ம் ஆண்டு, 4,246 பயனாளிகளுக்கு, 16,984 ஆடுகள், 2013-14ம் ஆண்டில், 3,866 பயனாளிகளுக்கு, 15,464 ஆடுகள், 2014-15ம் ஆண்டில், 4,838 பயனாளிகளுக்கு, 19,352 ஆடுகள் வழங்கப்பட்டுள்ளது.இந்த ஆடுகளின் நலனை பாதுகாக்கும் வகையில், வரும், 27, 28ம் தேதிகளில், அனைத்து இலவச ஆடுகளுக்கும் இலவசமாக குடற்புழு நீக்க முகாம், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் நடத்தப்படுகிறது.ஆடுகள் வழங்கப்பட்ட அந்தந்த கிராமங்களில், குடற்புழு நீக்கம் முகாம் நடத்தப்படும். குடற்புழு நீக்கம் செய்வதன் மூலம், ஆடுகளின் உடல் எடை கூடும். நோய் எதிர்ப்பு சக்தி மற்றும் இனவிருத்தி திறன் அதிகரித்து, ஆடுகளின் மூலம் கிடைக்கும் வருவாய் அதிகரிக்கும். எனவே, திட்ட பயனாளிகள் அனைவரும், தவறாது தங்களது ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்து கொள்ள வேண்டும், என கலெக்டர் பிரபாகர் கேட்டுக்கொண்டார்.

## நாற்றாங்காலில் காய்கறி திறன் மேம்பாட்டு பயிற்சி

கோத்தகிரி : கோத்தகிரி உட்கோட்டத்திற்கு உட்பட்ட கூக்கல்தொரை கிராமத்தில், அம்மா பண்ணை மகளிர் குழுக்களுக்கு நாற்றாங்காலில் காய்கறி வளர்க்கும் முறைகள் குறித்து திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கப்பட்டது.வேளாண்மை தொழிற்நுட்ப மேலாண்மை முகமை திட்டத்தின் கீழ் நடந்த பயிற்சி முகாமுக்கு, துணை வேளாண்மை அலுவலர் (பொ) ரமேஷ் தலைமை வகித்தார்.தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியை முனைவர் சாந்தி, நாற்றாங்காலில் காய்கறி வளர்க்கும் முறைகள் குறித்து, செயல் விளக்கத்துடன் விரிவாக எடுத்துரைத்தார். இதில், வேளாண்மை தொழிற்நுட்ப மேலாண்மை முகமை திட்ட அலுவலர்களுடன், 40க்கும் மேற்பட்ட விவசாயிகள் பங்கேற்று பயனடைந்தனர். உதவி வேளாண்மை அலுவலர் மணி நன்றி கூறினார்.

## குடகனாற்றில் தடுப்பணை அமைக்கும் பணி

தாடிக்கொம்பு : தாடிக்கொம்பு அருகே குடகனாற்றில் தடுப்பணை அமைக்கும் பணி நடந்து வருகிறது. வேடசந்தூர் அருகே உள்ள அழகாபுரி அணைக்கு செல்லும் குடகனாற்றில் ஆங்காங்கே தடுப்பணைகள் அமைக்கப்பட்டுள்ளன. இதன் மூலம் தண்ணீரை தேக்கி, நிலத்தடி நீர்மட்டத்தை உயர்த்தலாம். தாடிக்கொம்பு ஆத்துப்பட்டி அருகே தடுப்பணை அமைக்க அப்பகுதி மக்கள் வலியுறுத்தினர். இதையடுத்து பொதுப்பணித் துறை அதிகாரிகள் இப்பகுதியில் ரூ.6.5 கோடி மதிப்பீட்டில் தடுப்பணை அமைக்கும் பணியை துவங்கியுள்ளனர். இருமாதங்களாக நடந்து வரும் இப்பணி, விரைவில் முடியும் தறுவாயில் உள்ளது. இத்தடுப்பணையால், தாடிக்கொம்பு அருகில் உள்ள ஆத்துப்பட்டி, சிக்கையகவுண்டனூர், பள்ளப்பட்டி, ராயர்புரம் பகுதி

கிராமங்களில் உள்ள விவசாய கிணறுகளின் நீர்மட்டம் உயரும். மேற்பார்வையாளர் ஒருவர் கூறியதாவது,"இரண்டு மாதங்களுக்கு முன் பணி துவங்கப்பட்டது. இன்னும் மூன்று மாதங்களில் பணி முழுமையாக முடிந்து விடும், என்றார்.

## மலைப்பயிர்களில் ரசாயன மருந்துகளை தவிர்க்க வேண்டும்; துணைவேந்தர் யோசனை

தாண்டிக்குடி : மலைப்பிரதேச மண்டல ஆராய்ச்சி மற்றும் விரிவாக்கக் குழு ஆலோசனைக்குழு கூட்டம் தடியன்குடிசை தோட்டக்கலை ஆராய்ச்சி நிலையத்தில் நடந்தது. இதில் திண்டுக்கல், கோயமுத்தூர், நீலகிரி, சேலம், நாமக்கல், கடலூர், வேலூர் உள்ளிட்ட மலைப் பிரதேசத்தை சேர்ந்த ஆலோசனைக்குழு உறுப்பினர்களாக நியமிக்கப்பட்ட விவசாயிகள், தோட்டக்கலை, கால்நடை, விதைச்சான்று, மீன் வளம் உட்பட விவசாயத்துறை அதிகாரிகள் கலந்து கொண்டனர். கோயமுத்தூர் தோட்டக்கலைக் கல்லூரி முதல்வர் மாரியப்பன் வரவேற்றார். பல்கலை ஆராய்ச்சி நிலைய இயக்குனர் மகேஸ்வரன், வேளாண்மைக்குழு உறுப்பினர் அருண்நாகராஜன் பேசினர். துணைவேந்தர் ராமசாமி தலைமை வகித்து பேசியதாவது: வணிக முக்கியத்துவம் வாய்ந்த பயிர்களில் நல்ல ரகங்களை தேர்வு செய்ய வேண்டும். மலைத்தோட்டப் பயிர்களில் ஒருங்கிணைந்த பூச்சி, நோய் மேலாண்மை செய்து, ரசாயன பூச்சிக்கொல்லி மருந்துகளின் பயன்பாட்டை குறைத்து, தரமான பொருட்களை உற்பத்தி செய்யலாம்.

மேலும் கொல்லிமலை பகுதிக்கு கேரளாவில் விளையும் ரகமான அமிர்தா, நீலகிரி பகுதியில் உருளைக்கிழங்கு பயிரிட, ஒசூர் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நோயற்ற விதைகளைப் பெற்று பயனடையலாம், என்றார். மலை வாழை, அவகோடா, வாசனைப்பயிரான சர்வ சுகந்தி, கிராம்பு, ஏலக்காய், ஜாதிக்காய் சாகுபடி குறித்தும் விளக்கப்பட்டது. தடியன்குடிசை, உதகமண்டலம், ஏற்காடு,

கொடைக்கானல், தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானிகள் கலந்து கொண்டனர். தோட்டக்கலை ஆராய்ச்சி நிலைய தலைவர் பிரனீதா நன்றி கூறினார்.

## பாக்கு மட்டை உதிர்வு சீஸன் துவக்கம்; தட்டு தயாரிக்கும் தொழில் சுறுசுறுப்பு

வாழப்பாடி : வாழப்பாடி பகுதியில், பாக்கு மரத்தில் இருந்து மட்டை உதிர்ந்து விழும் சீஸன் துவங்கியுள்ளதால், பாக்கு மட்டை தட்டு தயாரிக்கும் தொழில் சுறுசுறுப்பு அடைந்துள்ளது. சேலம் மாவட்டத்தில், அயோத்தியாப்பட்டணத்தில் துவங்கி வாழப்பாடி, பெத்தநாயக்கன் பாளையம், ஏத்தாப்பூர் மற்றும் நரசிங்கபுரம் வரையுள்ள கிராமங்கள், பாக்கு உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. வாழப்பாடி பகுதி கிராமங்களில் உற்பத்தி செய்யப்படும், "ஆப்பி' என குறிப்பிடப்படும், "கொட்டைப்பாக்கு', தமிழகத்தின் பல்வேறு பகுதிகளுக்கு மட்டுமின்றி, மத்தியபிரதேசம், குஜராத், பீஹார், உத்திரபிரதேஷம், மஹாராஷ்டிரா உள்ளிட்ட வட மாநிலங்களுக்கு, ஆண்டுதோறும், 500 கோடி ரூபாய் அளவிற்கு, ஏற்றுமதி செய்யப்படுகிறது.பாக்கு அறுவடை சீஸன் முடிந்ததும், பாக்கு குலைகளை தாங்கி நின்ற பாக்கு மட்டைகள், மரத்தில் இருந்து உதிர்ந்து விழுகிறது. ஜனவரி மாதத்தில் இருந்து உதிர்ந்து விழும் பாக்கு மட்டைகளை சேகரிக்கும் விவசாயிகளும், விவசாய கூலித் தொழிலாளர் களும், வெயிலில் உலர வைத்து பதப்படுத்தி, பாக்கு மட்டை தட்டு தயாரிக்கும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு அனுப்பி வருகின்றனர்.இந்தாண்டு பாக்கு அறுவடை சீஸன் முடிவுக்கு வந்த நிலையில், தற்போது பாக்கு மரத்தில் இருந்து மட்டைகள் உதிர்ந்து விழுந்து வருகின்றன. அவற்றை சேகரிக்கும் விவசாயிகளும், விவசாய தொழிலாளர்களும், வெயிலில் உலர வைத்து பதப்படுத்தி விற்பனை செய்வதில், ஆர்வம் காட்டி வருகின்றனர்.முதல் தரமான, 1,000

வெண்ணிற பாக்கு மட்டை, 2,000 ரூபாய் வரை விலை போவதால், வறட்சியிலும் பாக்கு மரங்களுக்கு நீர் பாய்ச்சி பராமரித்து வரும், வாழப்பாடி பகுதி பாக்கு விவசாயிகள், மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## கறவை மாடுகளுக்கு இன்சூரன்ஸ் திட்டம் ; 2.40 லட்சம் இலக்கு

சிவகங்கை : தேசிய கால்நடை சமய பிரசார திட்டத்தின் கீழ் மத்திய, மாநில அரசு பங்களிப்புடன் 2.40 லட்சம் கறவை மாடுகள் காப்பீடு செய்யும் திட்டம் துவக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்க இலவச கறவை மாடுகள் வழங்கப்படுகிறது. கடந்த 3 ஆண்டாக மழையில்லை. தற்போது நல்ல மழை பெய்து தீவன உற்பத்தி அதிகரித்துள்ளதால் விவசாயிகள் அதிகளவில் கறவை மாடுகளை வளர்க்கின்றனர். இன்சூரன்ஸ்: விவசாயிகள் வளர்க்கும் கறவை மாடுகள் இயற்கை சீற்றம், விபத்தால் உயிரிழக்க நேரிட்டால் உரிமையாளருக்கு இழப்பீடு தர "தேசிய கால்நடை சமய பிரசார திட்டத்தை' அரசு துவக்கியது. 2014-15க்கு கால்நடை, ஆவின் சார்பில் 2.40 லட்சம் கறவை மாடுகளுக்கு காப்பீடு செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. பிரீமியம் : கறவை மாடு வளர்ப்போர் நேஷனல், யுனைடெட் இந்தியா, தி நியூ இந்தியா இன்சூரன்ஸ் கம்பெனியில் மட்டுமே காப்பீடு செய்ய முடியும். நீலகிரி தவிர்த்து, மற்ற மாவட்டத்தில் வறுமைக்கோட்டிற்கு கீழ் உள்ள எஸ்.சி.,எஸ்.டி.,யினர் கறவை மாடு காப்பீடு தொகைக்கான பிரீமியம் 30 சதவீதம் செலுத்தினால்,எஞ்சிய 70 சதவீதத்தை மத்திய,மாநில அரசு செலுத்தும். மற்றவர்கள் 50 சதவீதம் செலுத்தினால் எஞ்சிய 50 சதவீதத்தை அரசு ஏற்கும். நீலகிரிக்கு பிரீமியத்தில் கூடுதல் சலுகை உண்டு. கறவை மாடுகளை ஒன்று அல்லது 3 ஆண்டுக்கு மட்டுமே காப்பீடு செய்யலாம். ஒரே பயனாளி அதிக பட்சம் 5 கறவை மாடுகள் மட்டுமே காப்பீடு செய்யலாம். 15 நாளுக்குள் இழப்பீடு: இழப்பீடு கோரி கறவை மாடு உரிமையாளர் இன்சூரன்ஸ் நிறுவனத்தில் விண்ணப்பித்த 15 நாளுக்குள் இழப்பீடு வழங்கப்படும். விபரம் வேண்டுவோர் அந்தந்த

பகுதி கால்நடை மருத்துவமனை டாக்டரை அணுகி தெரிந்து கொள்ளலாம் என தமிழ்நாடு கால்நடை வளர்ச்சி முகமை அறிவித்துள்ளது.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## <u>கோடையை சமாளிக்க தர்ப்பூசணி: கோவையில் தினமும் 30 டன் விற்பனை</u>

கோவை, :கோடை கொளுத்த துவங்கியுள்ளதால், அதை சமாளிக்க பொதுமக்கள் தர்ப்பூசணி பழத்தை ஆர்வமாக வாங்கி சாப்பிடுகின்றனர். கோ வையில் மட்டும் தினசரி 30 டன் விற்பனையாகிறது. கோவையில் கடந்த சில நாட்களாக கோடை வெயில் கொளுத்துகிறது. இதனால் பொதுமக்கள் தர்ப்பூசணி சாப்பிட்டும், இளநீர், பழரசம், மோர் மற்றும் குளிர்பானங்கள் அருந்தியும் கோடையை சமாளித்து வருகின்றனர். இதில் தர்ப்பூசணி சாப்பிடுவது பொதுமக்களிடையே அதிகரித்துள்ளது. இதனால் கோவை மாநகரின் பல் வேறு பகுதிகளில் 100க்கு மேற்பட்ட தள்ளுவண்டிகளில் தர்ப்பூசணி முழு பழ மாகவும், கிலோ கணக்கி லும், கீற்றாகவும், பழத்துண்டுகளாகவும் விற்பனை செய்யப்படுகிறது. கோவை மாநகரில் மட்டும் கடந்த ஒரு வாரமாக தினசரி 30 டன் தர்ப்பூசணி விற்பனையாகி வருகிறது. கிலோ ரூ.15 வரை விற்கப்படுகிறது. தற்போது விற்பனை அதிகரித்துள்ளது. ஏப்ரல் மாதத்தில் விலை கிலோ ரூ.20 ஆக உயரும். கோவையில் விற்கப் படும் தர்ப்பூசணிகளில் பெரும்பாலானவை கர் நாடகா மாநிலத்திலிருந்து வருகிறது. இந்த பழங்களின் உள்பகுதி சிகப்பு, ஆரஞ்சு இரண்டு நிறத்தையும் கலந்தவையாக இருக்கும். நீர்ச்சத்தும், இனிப்பு சுவையும் அதிகமாக இருக்கும். மேலும் தாராபுரம், உடு மலை, தஞ்சாவூர், சிவகங்கை,

ஆண்டிபட்டி, வெள்ளகோவில், காங்கயம் ஆகிய பகுதிகளில் இருந்து பல்வேறு ரக தர்ப்பூசணி கள் வருகிறது. இப்பழங்களின் உள் பகுதி ரத்தச்சிகப்பாக இருக்கும். நீர்ச்சத்து நிறைந்திருக்கும். ஆனால், இனிப்பு சுவை குறைவாக இருக்கும். இதனால் பெங் களூர் ரக பழங்களுக்கு வா டிக்கையாளர்கள் அதிகம். கோவையில் பிப்ரவரி முதல் மே வரை கோடை யின் தாக்கம் அதிகமாக இருப்பதால், விற்பனை அதிகமாக இருக்கும். ஜூன் மாதம் சுமாராகவும், ஜூலை முதல் அக்டோபர் வரை மழை காரணமாக விற்பனை இருக்காது என்கின்றனர் விற்பனையாளர்கள்.

## ஆழியார் அணையிலிருந்து புதிய ஆயக்கட்டு பாசனத்துக்கு மீண்டும் தண்ணீர் திறப்பு

பொள்ளாச்சி, : பொள்ளாச்சியை ஆழியார் அணைக்கு, கான்டூர் கால்வாய், அப்பர் ஆழியார், குரங்கு அருவி மற்றும் நீரோடைகள் வழியாக தண்ணீர் வருகிறது. அணையிலிருந்து பழைய மற்றும் புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கும் ஒவ்வொரு ஆண்டும் குறிப்பிட்ட நாட்கள் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. ஆற்றில் திறந்துவிடப்படும் தண்ணீர் விவசாயத்துக்கு மட்டுமின்றி குடிநீர் தேவைக்கும் பயன்படுகிறது. மேலும் ஒப்பந்த அடிப்படையில் கேரளாவுக்கும் ஆண்டிற்கு குறிப்பிட்ட டிஎம்சி தண்ணீர் திறக்கப்படுகிறது. கடந்த 2014ம் ஆண்டில் ஜூலை மாதத்தில் பெய்த தென்மேற்கு பருவமழை தொடர்ந்து சில மாதங்கள் நீடித் தது. பின் நவம்பர் மாதத்தில் சில வாரங்கள் தென்மேற்கு பருவ மழை பொழிந்தது. இதனால் ஆழியார் அணையின் நீர்மட்டம், கடந்த ஜனவரி மாதம் துவக்கம் வரை 112அடிக்கும் மேலாக இருந்தது. தற்போது வெயிலின் தாக்கம் அதிகரிப்பு மற்றும் மழைப்பொழிவு இல்லாத காரணத் தால் அணைக்கு தண்ணீர் வரத்து குறைந்துள்ளது. தற்போது ஆழியார் அணையின் நீர் மட்டம் 103 அடியாக உள்ளது. வினாடிக்கு 300கனஅடி தண்ணீர் வந்து கொண்டிருக்கிறது. இதில், கடந்த சில மாதங்களாக பழைய மற்றும் புதிய

ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு தண்ணீர் திறப்பு தொடர்ந்திருந்தது. இந்நிலையில் புதிய ஆயக்கட்டு பாசன பகுதிகளுக்கு திறக்கப்படும் தண்ணீர் திறப்பு கடந்த 10ம் தேதியுடன் நிறுத்தப்பட்டது. புதிய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு தண்ணீர் திறப்பு, குறிப்பிட்ட நாட்களுக்கு முன்னதாக திடீர் என்று நிறுத்தப்பட்டதால் விவசாயிகள் வேதனையடைந்தனர். இருப்பினும் புதிய ஆயக்கட்டு பாசன பகுதியில் தற்போது நெல் மற்றும் பல்வேறு பயிர் வகைகள் சாகுபடி மேற்கொள்ளப்படுவதால், பாசனத்துக்கு மீண்டும் தண்ணீர் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இதையடுத்து, புதிய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு தண்ணீர் திறப்பு குறித்து அரசுக்கு பொதுப்பணித்துறையினர் கருத்துரு அனுப்பிவைத்தனர். இந்நிலையில் அதற்குண் டான உத்தரவு வரபெற்றதால் தற்போது மீண்டும் புதிய ஆயக்கட்டு பாசன பகுதிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இந்த தண்ணீர் திறப்பு வரும் 26ம் தேதிவரை தினமும் வினாடிக்கு 250கனஅடி வீதம் இருக்கும் என்றும் அதன்பின் புதிய ஆயக்கட்டு பாசனபகுதிக்கு தண்ணீர் திறப்பு நிறுத்தப்படும் என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

## <u>மக்காச் சோளம் சாகுபடி செய்தால் அதிக மகசூல் பெறலாம் வேளாண் உதவி இயக்குநர் தகவல்</u>

அன்னவாசல், : கிணற்றுப் பாசன விவசாயிகள் மாற்றுப் பயிராக மக்காச் சோளத்தை சாகு படி செய்வதன் மூலம் அதிக மகசூல் மற்றும் அதிக லாபம் பெறலாம் என்று வேளாண் துறை தெரிவித்துள்ளது. இதுகுறித்து அன்னவாசல் வட்டார வேளாண் உதவி இயக்குநர் சிங்காரம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: நடப்பாண்டிலும் போதிய அளவு மழை இல்லாததால் பயிர் சாகுபடி பரப்பு குறைந்துள்ளது. குறைந்த அளவு நீரைப் பயன்படுத்தி அதிக அளவு விளைச்சல் மற்றும் அதிக வருமானம் பெற ஏதுவாக கிணற்றுப் பாசன விவசாயிகள் மாற்றுப் பயிராக மக்காச்சோளத்தை பயிரிட்டு பயன்பெற வேண் டும்.இதற்கு நிலத்தை சட் டிக் கலப்பையால் 1 முறை உழவு செய்து பின்னர் கொக்கி

கலப்பைக் கொண்டு 2 முறை நன்கு உழவுச் செய்ய வும். 1 ஏக்கருக்கு 5 டன் தொழுஉரம் மற்றும் 4 பாக் கெட் அசோஸ்பைரில்லம் கலந்து பரப்பி நன்கு உழவுச் செய்து 60 செ.மீ. இடைவெளியில் 6 மீ நீளம் கொண்டு பார் அமைக்க வும்.நல்லத் தரமான விதை களை தேர்ந்தெடுத்து வீரிய ஒட்டு ரகங்களுக்கு (கோ எச்எம் 5) 8 கிலோ ஒரு ஏக் கர் என்ற அளவி லும் ரகங்களுக்கு 10 கிலோ எக்டேர் என்ற அளவிலும் பின்பற் றவும். வரிசைக்கு வரிசை 60 செ.மீ. செடிக்குச் செடி 25 செ.மீ. அதாவது ஒரு ச.மீ. க்கு பயிர் எண் ணிக்கை 6 7 செடிகள் என்ற முறை யை கடைபிடிக்கவும்.பொதுப் பரிந்துரைப்படி களைச் சத்து ஒரு ஏக்கருக்கு 54 கிலோ வும், மணிச்சத்து 25 கிலோ சாம்பல் சத்து 20 கிலோ அதாவது யூரியா 117 கிலோ சூப்பர் 156 கிலோ பொட்டாஷ் 32 கிலோ களைச் சத்தை பாதி அள வும், மணிச்சத்தை முழு அளவும், அடியுரமாக இடவும்.கால் பங்கு சாம் பல் சத்தை விதைத்த 30 நாட்களில் இட்டு மண் அணைக்கவும். 2வது மேல் உரமாக எஞ்சிய தழைச்சத்து மற்றும் சாம்பல் சத்துக்களை 40 ல் இருந்து 45வது நாட் களில் இடவேண்டும். மக் காச் சோளம் நடவுச்செய்த 100 நாட்களில் அறுவடைக்கு வருவதா லும், நெல்லுக் குத் தேவைப்ப டும் நீரின் அளவில் பாதிக் கும் குறை வாகத் தேவைப்படுவதா லும், உரச்செலவு குறைவ தாலும், மக்காச்சோளத்தை பயிரிட்டு அதிக மகசூல் பெற வேண் டும் என்றார்.

**25 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய பருத்தி கழகம் பெரம்பலூரில் கொள்முதல்**

பெரம்பலூர், : இந்திய பருத்தி கழகம் 25 ஆண்டுகளுக்குப் பிறகு பெரம்பலூரில் இன்று பருத்தியைக் கொள்முதல் செய்கிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். பெரம்பலூர் மாவட்டம் பருத்தி சாகுபடிக்கான பரப்பளவு மற்றும் உற்பத்தியில் தமிழகத்திலேயே தொடர்ந்து முதலிடம் வகித்து வருகிறது. இந்த மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக சராசரியாக 67,258 ஏக்கர் பரப்பளவில் பருத்தி சாகுபடி

செய்யப்பட்டு, 28,918 டன் பருத்தி உற்பத்தி செய்யப்பட்டு வருகிறது. பருத்திக்கு சராசரியாக ஒரு குவிண்டாலுக்கு ரூ. 3,800 முதல் ரூ. 4 ஆயிரம் வரை விலை கிடைத்தது. இதுவரை குறைந்த பட்ச ஆதார விலைக்கு குறையாமல் பருத்திக்கு விலை கிடைத்து வந்தது. தற்போது பருத்தியின் விலை குறைந்தபட்ச ஆதார விலைக்குக் கீழே குறைந்து போனதால், பருத்தி விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வந்தனர். இந்நிலையில் பருத்தி விவசாயிகளின் வேண்டுகோளுக்கேற்ப, பருத்திக்கு நல்லவிலை கிடைப்பதற்காக பெரம்பலூர் மாவட்டக் கலெக்டர் தரேஸ்அகமது, கோவையிலுள்ள தமிழ்நாடு பருத்திக் கழக அதிகாரி களிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். இதன் பயனாக கடந்த 25 ஆண்டுகளாக தமிழகத்தில் எந்த மாவட்டத்திலும் பருத்தியை கொள்முதல் செய்யாத இந்திய பருத்திக்கழகம் பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தியை கொள்முதல் செய்ய முன்வந்துள்ளது. இதன்படி, பெரம்பலூர்அருகே எளம்பலூர் வடக்குமாதவி சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் இந்திய பருத்திக்கழகம் பருத்தியை இன்று (23ம் தேதி) நேரடியாகக் கொள்முதல் செய்கிறது. இதனால் நிம்மதியடைந்துள்ள பருத்தி விவசாயிகள் ஆர்வத்துடன் தங்களது பருத்திகளை மூட்டை மூட்டையாக ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு கொண்டுவந்து குவித்து வருகின்றனர். கலெக்டர் தரேஸ்அகமது நேற்று நேரில்சென்று பார் வையிட்டு, விவசாயிகளுக்கான தேவைகளை கேட்டறிந்து நிறைவேற்ற ஒழுங்குமுறை விற்பனைக்கூட அதிகாரி களுக்கு உத்தரவிட்டார். பின்னர் கலெக்டர் தெரிவித்ததாவது : 25 ஆண்டுகளுக்குப் பிறகு இந்திய பருத்தி கழகம் பெரம்பலூர் மாவட்டத்தில் பருத்தியைக் கொள்முதல் செய்ய முன்வந்துள்ளது மிகப்பெரிய காரியமாகும். எனவே பருத்தி விவசாயிகள், இன்று(23ம்தேதி) இந்த வாய்ப்பை பயன்படுத்திக் கொள்ள வேண்டும். விற்பனைக்கு கொண்டுவரும் பருத்தியின் ஈரப்பதம், இழையின் நீளம், இழையின் வலிமைத்தன்மை போன்ற தரத்தின் அடிப்படையில் இந்திய பருத்திக் கழகம் பருத்திக்கான விலையை நிர்ணயம் செய்வார்கள். தரமான 27.5

முதல் 30.5 மிமீ வரை இழை நீளமுள்ள ஸிசிபி 2, ஸிசிபி 20 போன்ற நீண்ட இழைரக பருத்திக்கு குவிண்டாலுக்கு ரூ. 3,950 விலை கிடைக்கும். 32.5 முதல் 37.0 மிமீ வரை இழை நீளமுள்ள எம்ஆர்சி 7918, எம்ஆர்சி 6918 போன்ற மிக நீண்ட இழை ரக பருத்திக்கு குவிண்டாலுக்கு ரூ. 4,450 விலை கிடைக்கும். 8 சதவீத ஈரப்பதத்துடன் உள்ள பருத்திக்கு முழு விலையும், ஒவ்வொரு சதவீதம் அதிகரிக்கும்போதும் முழு விலையில் ஒரு சதவீதம் குறைத்தும் விலை நிர்ணயிக்கப்படும். அதாவது ஸிசிபி 2, ஸிசிபி 20 போன்ற நீண்ட இழை ரக பருத்திக்கு 9 சதவீத ஈரப்பதத் துடன் இருப்பின் ஒரு சதவீதம் குறைத்து ரூ. 3,910 விலை கிடைக்கும். 12 சதவீத ஈரப்பதத்திற்கு மேலுள்ள பருத்தியை கொள்முதல் செய்யமாட்டார்கள். எனவே, நன்கு வெடித்த பருத்தியினை அறுவடை செய்து, நிழலில் உலரவைத்து 8 சதவீத ஈரப்பதத்துடன் தூசியில்லாமல் சுத்தப்படுத்தி கொண்டுவரும் பட்சத்தில், விவசாயி களுக்கு நல்ல விலை கிடைக்கும். பருத்தி கொள்முதல் செய்யப்பட்ட 8 நாளில் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யப்படும் என கலெக்டர் கூறினார்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>தேன் சேகரிக்கும் நவீன முறை</u>**




தேனீ வளர்ப்பு சிறந்த குடிசைத் தொழில்களில் ஒன்றாக உள்ளது. தேனீ வளர்ப்பவர்கள் தேனை சேகரிக்க சற்று சிரமப்படுகிறார்கள். ராணி தேனியை இடம் மாற்றி, வேலைக்கார தேனிக்களை அதன் கட்டளைப் படி செயல்பட வைத்து கூட்டை வேறு இடத்திற்கு மாற்றிய பிறகு தேனை சேகரிப்பது வழக்கமாக உள்ளது. இதற்கு குறைந்தபட்சம் 2 மணி நேரமாவது செலவிட வேண்டி இருக்கும். சில பாதுகாப்பு முன்னேற் பாடுகளும் செய்ய வேண்டி இருக்கும். ஆஸ்திரேலியாவில் சிரமமின்றி தேனை சேகரிக்க நவீன யுத்தியை கண்டுபிடித்துள்ளனர். தேன்கூட்டின் பெட்டியை திறக்காமலும், தேனீக்களுக்கு தொந்தரவு அளிக்காமலும் எளிதில் தேன் சேகரிக்கும் வடிகுழாய் முறையை அவர்கள் உருவாக்கி உள்ளனர். தந்தை மற்றும் மகனான ஸ்டூவர்ட்- கேடர் ஆண்டர்சன் ஆகிய இருவரும் இந்த நுட்பத்தை அறிமுகம் செய்துள்ளனர். தேனீக்கள் தேனடையை உருவாக்கி பாதிக்குமேல் தேன்நிரப்பும் காலம் வரும்போது, தேனீவளர்ப்பு பெட்டியின் பக்கவாட்டில் நீட்டிக் கொண்டிருக்கும் வடிகுழாயை தேனடையில் புதையும் வகையில் உட்செருகி வைத்தால் போதுமானது. பிறகு சேகரமாகும் தேன், நேரடியாக வடிந்து பாட்டில் களில் நிரம்பிவிடும். பலமணி நேர உழைப்பு மிச்சமாவதுடன், தேனீக்களை தீண்டாமலும் தேனெடுத்து சுவைக்கலாம். மலைத்தேனை

அம்பு விடுத்து நூலின் வழியே வடித்தெடுத்த நம்நாட்டு பழக்கத்தைதான் அவர்கள் வேறுவழியில் நவீனப்படுத்தி அறிமுகப்படுத்தியிருக்கிறார்கள்!

## <u>தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் 60 ‘இ-சேவை’ மையம் அமைச்சர் தங்கமணி தொடங்கி வைத்தார்</u>



தோக்கவாடி கூட்டுறவு கடன் சங்கத்தில் ‘இ–சேவை’ மையத்தை அமைச்சர் தங்கமணி தொடங்கி வைத்தபோது எடுத்த படம். அருகில் மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி உள்ளார்.

நாமக்கல் மாவட்டத்தில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங் கங்களில் 60 ‘இ-சேவை’ மையங்களை அமைச்சர் தங்கமணி தொடங்கி வைத்தார்.

‘இ-சேவை’மையங்கள்

நாமக்கல் மாவட்டம், மின்மாவட்ட திட்டத்தின் கீழ் ஏற்கனவே 79 அரசு சேவை ‘இ-சேவை’ மையங்கள் தொடங்கப்பட்டு மக்களுக்கு 5 வகை சான்றிதழ்கள் எளிமை யாக கிடைத்து வருகிறது. இச்சேவை மையங்களை மேலும் விரிவாக்க தமிழகஅரசு உத்தரவிட்டுள்ளது. அதன்படி நாமக்கல் மாவட்டத்தில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில் 60 அரசு பொது இ-சேவை மையங்கள் தொடங்க திட்ட மிடப்பட்டது. அதன்படி தோக்கவாடி கூட்டுறவு கடன் சங்கத்தில் 60 கூடுதல் அரசு இ-சேவை மையங்களின் திறப்பு விழா நடைபெற்றது. விழாவிற்கு மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை தாங்கினார். விழாவில் தொழில்துறை அமைச்சர் பி.தங்கமணி கலந்துகொண்டு 60 கூடுதல் அரசு இ-சேவை மையங்களை திறந்து வைத்து பேசினார். அப்போது அவர், திருச்செங்கோடு வட்டத்தில் தோக்கவாடி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் உட்பட 17 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், ராசிபுரம் வட்டத்தில் 32 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள்,

பரமத்தி வேலூர் வட்டத்தில் 7 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், நாமக்கல் வட்டத்தில் 3 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்கள், கொல்லிமலை வட்டத்தில் 1 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கம் என மொத்தம் 60 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கங்களில் அரசு பொது இ-சேவை மையங்கள் செயல்பட உள்ளது என்று தெரிவித்தார்.

பாதுகாப்புபெட்டகம்

முன்னதாக தோக்கவாடி தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு பெட்டகத்தை அமைச்சர் தங்கமணி திறந்து வைத்து, 5 நபர்களுக்கு பாது காப்பு பெட்டக சாவிகளையும், 3 நபர்களுக்கு ரூ.17,000 தானிய ஈட்டுக் கடன் உதவிகளையும், மின் மாவட்ட திட்டத்தின் மூலம் பதிவு செய்ய 7 நபர்களுக்கு இருப்பிடச் சான்றுகளையும், 2 நபர்களுக்கு சாதிச் சான்றிதழ்களையும் வழங்கினார். விழாவில் மாவட்ட வரு வாய் அலுவலர் சுப்புலட்சுமி, திருச்செங்கோடு உதவி கலெக்டர் டாக்டர் சுமன், திருச்செங்கோடு ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் பாலசுப்பிரமணியம், டி.சி.எம்.எஸ். தலைவர் கந்தசாமி உள் பட கூட்டுறவாளர்கள், உள் ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், அரசுத்துறை அலுவலர் கள் கலந்து கொண்டனர். முடிவில் இணைப்பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) லட்சுமி நன்றி கூறினார்.

## <u>எளம்பலூரில் உள்ள வேளாண்மைத்துறை ஒழுங்கு முறை கூடத்தில் பருத்தியின் தரத்தை கலெக்டர் ஆய்வு</u>



எளம்பலூரில் உள்ள வேளாண்மைத்துறை ஒழுங்குமுறை கூடத்தில் பருத்தியின் தரத்தை கலெக்டர் தரேஸ் அஹமது ஆய்வு செய்தார்.

பருத்திகொள்முதல்

பெரம்பலூர் மாவட்டம் எளம்பலூர் வடக்குமாதவி சாலையில் அமைந்துள்ள வேளாண்மைத்துறை ஒழுங்கு முறை விற்பனைக்கூடத்தில் பருத்தி கொள்முதல் நடந்து வருகிறது. இதனை கலெக்டர் தரேஸ் அஹமது நேரில் சென்று பார்வையிட்டார். அப்போது அவர் பருத்தியின் தரம் குறித்து ஆய்வு செய்தார்.பின்னர் நிருபர்களிடம் கலெக்டர் கூறியதாவது:-

ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் இந்திய பருத்தி கழகம் மூலம் கொள்முதல் செய்ய மேற்கொள்ளப்பட்டுள்ள ஏற்பாடு மற்றும் பருத்தி விவசாயிகளிடையே மிகுந்த வரவேற்பை பெற்றுள்ளது. எனவே விவசாயிகள் ஆர்வத்துடன் பருத்திகளை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கொண்டு வர ஆரம்பித்துள்ளனர்.

விலைநிர்ணயம்

விற்பனைக்கு கொண்டு வரும் பருத்தியின் ஈரப்பதம், இழையின் நீளம், இழையின் வலிமை தன்மை போன்ற தரத்தினை ஆய்வு செய்து அதனடிப்படையில் இந்திய பருத்தி கழகம் விலை நிர்ணயம் செய்வார்கள். நல்ல தரமான நீண்ட இழை ரக பருத்தி ஒரு குவிண்டாலுக்கு ரூ.3,950 விலை கிடைக்கும். மிக நீண்ட இழை ரக பருத்தி ஒரு குவிண்டாலுக்கு ரூ.4,450 விலை கிடைக்கும். 8 சதவீத ஈரப்பதத்துடன் உள்ள பருத்திக்கு முழு விலையும், ஒவ்வொரு சதவீதம் அதிகரிக்கும் போதும் முழு விலையில் ஒரு சதவீதம் குறைத்தும் விலை நிர்ணயிக்கப்படும். 12 சதவீத ஈரப்பதத்திற்கு மேல் உள்ள பருத்தியினை கொள்முதல் செய்யமாட்டார்கள். எனவே பருத்தி விவசாயிகள் நன்கு வெடித்த பருத்தியினை அறுவடை செய்து நிழலில் உலரவைத்து 8 சதவீத ஈரப்பதத்துடன் தூசியில்லாமல் சுத்தப்படுத்தி கொண்டு வரும்பட்சத்தில் நல்ல விலை கிடைக்கும். இந்திய பருத்தி கழகம் கொள்முதல் செய்யப்பட்ட தினத்திலிருந்து 8 நாட்களுக்குள் பணம் கிடைக்குமாறு பருத்தி விவசாயிகளுக்கு காசோலையாக பணம் பட்டுவாடா

செய்யப்படும். அனைத்து பருத்தி விவசாயிகளும் பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு தாங்கள் சாகுபடி செய்யும் பருத்தியை கொண்டுவந்து சரியான எடையில் சரியான விலைக்கு விற்பனை செய்து பயன்பெற வேண்டும். இவ்வாறு அவர் கூறினார். அப்போது துணை இயக்குனர் (வேளாண் வணிகம்) சுப்ரமணியன், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கனகசபை, வேளாண் அலுவலர் ரமேஷ் உள்ளிட்ட அலுவலர்கள் உடனிருந்தனர்.

## வடகாடு உள்பட பல்வேறு பகுதிகளில் 100 ஏக்கரில் வெள்ளரி சாகுபடி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் விவசாயிகள் மகிழ்ச்சி

வடகாடு உள்பட பல்வேறு பகுதிகளில் 100 ஏக்கரில் வெள்ளரி சாகுபடி செய்யப்பட்டு உள்ளது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால் விவசாயிகள்மகிழ்ச்சிஅடைந்துஉள்ளனர்.

குறுகியகாலசாகுபடி

புதுக்கோட்டை மாவட்டம் வடகாடு, மாங்காடு, அணைவயல், கீழாத்தூர், புள்ளான்விடுதி, கொத்தமங்கலம், கீரமங்கலம் போன்ற பகுதிகளில் நெல், வாழை, கரும்பு, சோளம், கடலை ஆகிய பயிர்கள் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டு வந்தன. கடந்த இரண்டு ஆண்டுகளில் போதிய அளவு பருவ மழை பெய்யாததை அடுத்து குளங்கள், ஏரிகள் வறண்டு போனதாலும், மும்முனை மின்சாரம் குறைந்த அளவே வழங்கப் பட்டதாலும் நெல்,வாழை ஆகிய பயிர்கள் தண்ணீரின்றி கருகின. இதனால் விவசாயிகள் தொடர் நஷ்டத்தை சந்தித்து வந்தனர். இதனால் விவசாயிகள் ஆழ்குழாய் கிணறுகள் மூலம் கிடைக்கும் குறைந்த அளவு நீரை கொண்டு குறுகிய கால சாகுபடி செய்யும் நிலைக்கு தள்ளப்பட்டனர்.

வெளியூர்களுக்கு இணையானஉணவு

இதையடுத்து வடகாடு பகுதியில் பெரும்பாலான விவசாயிகள் தற்போது 3 மாத கால சாகுபடியான ஏற்றுமதி ரக கொடி வெள்ளரி சாகுபடியில்

மும்முரமாக ஈடுபட்டுள்ளனர். இவ்வகை வெள்ளரி அமெரிக்கா, ஆஸ்திரேலியா, போன்ற வெளிநாடுகளில் அதிகளவில் இணை உணவாக பயன்படுத்தப்படுகிறது. இதனால் இந்தியாவில் இருந்து அதிக அளவில் கொடி வெள்ளரி ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வகை வெள்ளரிக்கு, இணை உணவாக பயன்படுத்தும் நாடுகளில் கடும் கிராக்கி உள்ளது. இதனால் சென்னை, தூத்துக்குடி, திருநெல்வேலி, திண்டுக்கல், ஆகிய ஊர்களில் உள்ள ஏற்றுமதி நிறுவனங்கள் வடகாடு பகுதியில் வந்து முகாமிட்டும், இடைத் தரகர்கள் மூலமாகவும் விவசாயிகளுக்கு விதை, உரம், முன்பணம் தந்து விளையும் வெள்ளரியை விவசாயிகள் இருக்கும் இடத்திற்கே வந்து வாங்கி செல்கின்றனர். இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். ஒரு ஏக்கருக்கு ரூ.10 ஆயிரம் இப்பகுதியில் விளையும் வெள்ளரியை நான்கு ரகமாக பிரித்து விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. நாம் உண்ணும் வெள்ளரியை போல பெரியதாக வளர விடாமல் சுண்டு விரல் அளவுக்கு எடுத்தால் அது முதல் ரகம் இதை விட பெரிதாக செல்ல செல்ல 2, 3, 4 என்று ரகம் பிரித்து விலை நிர்ணயித்துள்ளனர். முதல் ரகம் கிலோ 23 ரூபாய்க்கும், 2–வது ரகம் 13 ரூபாய், 3–வது ரகம் 6 ரூபாய் , விவசாயிகளிடம் இருந்தும், இடைத்தரகர்கள் மூலமாகவும் ஏற்றுமதி நிறுவனத்தினர் வாங்கி செல்கின்றனர். இதை மதிப்பு கூட்டி வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த வெள்ளரி பயிரிடுவதன் மூலம் உரம், கம்பு, கம்பி, சணல் வேலை ஆட்களின் கூலி என்று அனைத்து செலவுகளும் போக விவசாயிக்கு ஒரு ஏக்கருக்கு குறைந்த பட்சம் 10 ஆயிரம் ரூபாய் கிடைக்கிறது என்கிறார்கள் இப்பகுதி விவசாயிகள். இதனால் வெள்ளரி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இந்த ஆண்டு மட்டும் வடகாடு, கீழாத்தூர், மாங்காடு புள்ளான்விடுதி, கொத்தமங்கலம் பகுதியில் சுமார் 100 ஏக்கரில் வெள்ளரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்டத்தில் பெரும்பாலான பகுதி விவசாயிகள்

வெள்ளரி சாகுபடியில் தங்களை இணைத்துக் கொண்டு உள்ளனர். இதனால் வெள்ளரி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வேளாண் துறை மானியத்தில் உரம், மருந்து ஆகியவற்றை வழங்கவேண்டும் என்று அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தேனியில் வாட்டி வதைக்கும் வெயில்: தர்பூசணி விற்பனை களை கட்டியது

தேனி தேனியில் மக்களை வெயில் வாட்டி வதைப்பதால் தர்பூசணி உள்ளிட்ட குளிர்ச்சி தரும் பழங்களின் விற்பனை களை கட்டி உள்ளது.

### வெயிலின் தாக்கம்

தேனியில் கோடை காலம் தொடங்கும் முன்பே தற்போது வெயிலின் தாக்கம் அதிகமாக உள்ளது. காலையில் இருந்து மாலை வரை வெயிலின் தாக்கம் அதிக அளவில் இருக்கிறது. நண்பகல் நேரங்களில் மண் தரையும், சாலைகளும் அனலாய் கொதிக்கின்றன. இதனால் தெருக்கள், சாலைகளில் மக்கள் நடமாட்டம் குறைந்து விட்டன. வெயிலின தாக்கம் அதிக அளவில் உள்ளதால் தேனி நகரின் சாலையோரம் தர்பூசணி, இளநீர், கரும்புச்சாறு, கம்பங்கூழ் விற்பனையை வியாபாரிகள் தொடங்கி உள்ளனர். வெயிலின் உக்கிரம் நாள்தோறும் அதிகரிப்பதால், குளிர்ச்சியான உணவுகளை விற்பனை செய்பவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து உள்ளது. தேனி நகரில் மதுரை சாலை, பெரியகுளம் சாலையில் பலரும் இந்த வெயில் கால சீசன் வியாபாரத்தில் களம் இறங்கி உள்ளனர்.

### தர்ப்பூசணி பழங்கள்

வெயிலுக்கு இதமான தர்பூசணி பழங்கள் ஒரு கிலோ ரூ.20 முதல் ரூ.25 வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அத்துடன் இந்த பழங்கள் சிறு, சிறு துண்டுகளாக வெட்டி வைக்கப்பட்டு ஒரு துண்டு ரூ.5 என விற்பனை செய்யப்படுகிறது. இதன் விற்பனையும் களை கட்டி உள்ளது. தாகம் தீர்ப்பதால் மக்களும் இதனை ஆர்வத்துடன் வாங்கி சாப்பிட்டு வருகின்றனர். தேனியில் கடந்த சில நாட்களாக கடும் வெயில் வாட்டி

வதைத்து வரும் நிலையில், நேற்று 93.6 டிகிரி அளவில் வெயில் அடித்தது. நகர் பகுதி முழுவதும் பகல் நேரங்களில் கடும் வெப்பமாக காணப்பட்டது. இதனால் உடலுக்கு குளிர்ச்சி தரும் உணவுகளை வாங்கி உண்பதில் மக்கள் ஆவலாக இருந்தனர். அத்தகைய பொருட்களின் விற்பனையும் களை கட்டியது.

**<u>சூடுபிடிக்கிறது வெயில் தர்பூசணி, இளநீர் விற்பனை அமோகம்</u>**



நெல்லையில் சூடுபிடிக்கும் வெயிலால், தர்பூசணி, இளநீர் போன்ற சூட்டை தணிக்கும் பொருட்களின் விற்பனை அதிகரித்து உள்ளது.
சூடுபிடிக்கும் வெயில்
வடகிழக்கு பருமழை முடிந்து சில நாட்கள் மேகமூட்டமாக காட்சி அளித்ததால் வெயிலின் தாக்கம் குறைவாகவே காணப்பட்டது. தற்போது இரவு நேரத்தில் பனிப்பொழிவு அதிகமாகவும், பகலில் வெயிலின் தாக்கமும் தொடங்கி விட்டன. நெல்லை, பாளையங்கோட்டை பகுதியில் வழக்கத்தைவிட வெயிலின் தாக்கம் நேற்று அதிகமாகவே காணப்பட்டது. இதையொட்டி இருசக்கர வாகனங்களில் சென்றவர்கள் கருப்பு கண்ணாடி மற்றும் முகத்தை பாதுகாக்கும் பொருட்களை அணிந்து கொண்டு பயணம் செய்தார்கள். கோடை வெயில் தொடங்கி விட்டதையொட்டி வியாபாரிகள் பொது மக்கள் விரும்பும் பல்வேறு பொருட்களை விற்பனைக்காக நெல்லைக்கு கொண்டு வந்து உள்ளார்கள். பாளையங்கோட்டை தெற்கு பஜார் லூர்துநாதன் சிலை பகுதியில் தர்பூசணி, இளநீர், அன்னாசி பழம் போன்றவை குவித்து வைத்து விற்பனை செய்யப்படுகின்றன. இதே போல் வ.உ.சி. திடல், பாளையங்கோட்டை, சமாதானபுரம், நெல்லை சந்திப்பு, டவுன் பகுதிகளில் சூட்டை தணிக்கும் பொருட்கள் விற்பனைக்காக வியாபாரிகளால் குவித்து வைக்கப்பட்டு உள்ளன.

தர்பூசணி

நெல்லையில் 3 வகையான தர்பூசணிகள் விற்பனை செய்யப்படுகின்றன.

திண்டுக்கல் பகுதியில் இருந்து வரக்கூடிய தர்பூசணி, நெல்லை மாவட்டத்தில் விளையக்கூடிய தர்பூசணி மற்றும் வெளிப்புறம் அடர் பச்சை நிறத்தில் காட்சி அளிக்கும் பெங்களூர் தர்பூசணி ஆகியவை விற்பனை செய்யப்படுகின்றன. இதில் அதிக இனிப்பு சுவை தரக்கூடிய நாட்டு தர்பூசணி 1 கிலோ ரூ.20–க்கும், உள்ளூர் தர்பூசணிகள் 1 கிலோ ரூ.15–க்கும், பெங்களூர் தர்பூசணி ரூ.28–க்கும் விற்பனை செய்யப் படுகின்றன. இதுதவிர இளநீர் ஒன்று ரூ.20–க்கும், சாத்துக்குடி ஆரஞ்சு ஜூஸ் ரூ.30, கரும்பு சாறு ரூ.10, பதநீர் –ரூ.10 மற்றும் நுங்கு, கம்மங்கூழ், கேப்பை கூழ் ஒடு டம்பளர், மோர் ஆகியவை 1 டம்ளர் – ரூ.10 எனவும், நுங்கு எண்ணிக்கைக்கு ஏற்பவும் விற்பனை செய்யப் படுகின்றன. வெயிலின் தாக்கத்தில் இருந்து பாதுகாத்துக் கொள்ள இந்த கடைகளில் மக்கள் கூட்டம் அதிகமாக காணப்படுகிறது. இதேபோல் பழஜூஸ் மற்றும் பாட்டில் குளிர்பான கடைகளிலும் மக்கள் நடமாட்டம் அதிகமாக காணப்படுகிறது.